R4922

INTERESTING QUESTIONS
ஆவலைத் தூண்டும் கேள்விகள்

ஜீவிய உரிமைகள் தேவைப்பட்டன

கேள்வி : கிறிஸ்து அவரது பயன்பாட்டிற்கு பூமிக்குரிய ஜீவாதார உரிமையை பெற்றிருக்காவிட்டால் அவர் உலகிற்கு நித்திய பிதாவாக ஆக முடியுமா?

பதில் : ஆயிரம் வருட யுகத்தில் ஆதாமுக்கும் அவரது இனத்திற்கும் ஜீவாதார உரிமையை கொடுப்பதற்கு நமது கர்த்தராகிய இயேசு பூமிக்குரிய ஜீவாதார உரிமையை பெற்றிராவிட்டால், அவர் அந்த இனத்தின் பிதா என்று அழைக்கப்பட முடியாது. கொடுப்பதற்கு பூமிக்குரிய ஜீவன் அவரிடம் இல்லையென்றால் மனித இனத்தை அவரால் புதுப்பிக்க முடியாது.

நாம் "தேவனுக்கு சுகந்த வாசனையாக கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்"

கேள்வி : சுகந்த வர்க்கம் பிரதான ஆசாரியனால் எரிக்கப்பட்டது. இது பரிபூரண மனிதனாகிய இயேசுவை குறிப்பிட்டது. பிரதான ஆசாரியனின் சரீர அங்கங்களும் மற்றும் உதவி ஆசாரியர்களும் இந்த பலியை செலுத்துகிறார்கள் என்று புரிந்து கொள்ளப்படலாமா? அப்படியிருக்குமானால் இது எப்படி காண்பிக்கப்படுகிறது?

பதில் : இரண்டாவது தடவை சுகந்த வர்க்கம் செலுத்தப்பட்டதாக லேவியராகமத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. இது இரண்டு தடவை செலுத்தப்பட வாய்ப்பே இல்லை. எனினும் சபையின் பலி, இயேசுவின் மரணத்தின் மூலம் விளைந்த பலனாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது மரணம் வரை தொடர வேண்டும். முடிவில் அவர்கள் மகிமையில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்கிற கருத்து இருக்கிறது. "நமது கர்த்தர் இருந்த பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்." அவர் நாளுக்கு நாள் கீழ்ப்படிதலில் வளர்ந்து வந்தது போல நாமும் நாளுக்கு நாள் கீழ்ப்படிதலில் வளர்ந்து வருகிறோம். அவரது விஷயத்தில் அன்பின் ஆவியின் வைராக்கியம் விளங்கப்பண்ணப்பட்டது போல நாமும் விளங்கப்பண்ணுகிறோம். இல்லையென்றால் அந்த சரீரத்தில் அங்கங்களாக நாம் அனுமதிக்கப்பட முடியாது.

ஆகையால் அவர் செலுத்திய சுகந்த வர்க்கம் ஒரு வகையில், ஒரு குறிப்பிட்ட அளவு அவரது சரீரமாகிய முழு சபையையும் குறிப்பிட்டது. ஏனெனில் தெய்வீக நோக்கத்திற்கு இசைவாக, உலக தோற்றத்திற்கு முன்னே அவரது அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்களுக்கு முன்னோடியாக பிரதிநிதியாக, பரிகாரியாக இருந்தார். ஆகையால் அவரது பரிபூரணத்தை செலுத்துவதில், அவரது சாட்டுதலின் மூலம் அவரது அங்கங்களாக பூரணப்பட நாமும் செலுத்தப்பட்டோம்.

இந்த உண்மையின்படி இரண்டாவது தடவையாக சுகந்த வாசனை செலுத்தப்பட்டதாக சொல்லப்படவில்லை. நாம் தனிப்பட்டவர்களாக நாம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் போகாமல், அவரது சரீர அங்கங்களாக செல்கிறோம். நாம் உலகிற்கு கெட்ட வாசனையாக இருந்தாலும், "நாம் கிறிஸ்துவில் தேவனுக்கு சுகந்த வாசனையாக இருக்கிறோம் என்று சொல்லலாம்." "ஆகையால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனை பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்." "நாங்கள் தேவனுக்கு கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்." (எபேசியர் 5:1,2; 2 கொரிந்தியர் 2:15; வெளிப்படுத்தல் 8:3,4) "ஆகையால் ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்பொழுதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்." (எபிரேயர் 13:15,16)

தேவ கிருபையால் அனைவரும் பிரகாரத்தில் இருக்கிறார்கள்

கேள்வி : தேவ கிருபை இல்லாமல் யாராவது பிரகாரத்தில் இருக்க முடியுமா?

பதில் : ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகார நிலைமை தேவனுடைய கிருபையை குறிக்கிறது. ஆனால் ஆசரிப்புக் கூடாரம் உயர்ந்த அளவில் கர்த்தரில் தேவனுடைய கிருபையின் நிலைமையை குறித்தது.

தற்காலத்தில் பிரகாரம் என்பது தேவனில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்துகிற, தேவனையும் அவரது விசுவாசத்தையும் நெருங்கி, நெருங்கி வருகிற நிலைமையை குறிக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய தயவை பெற்றவர்கள். ஏனெனில் அவர்கள் அவரிடத்தில் விசுவாசத்தின் ஆவியை உடையவராக இருக்கிறார்கள். அது அவரது பரிபூரண சித்தத்தை அறியவும் செய்யவும் அவர்களை படிப்படியாக செல்ல வழி நடத்துகிறது. இந்த யுகத்தில் அழைக்கப்பட்ட அனைவரைப் பற்றிய தேவனுடைய சித்தம் என்னவென்றால், அவர்களது பரிகாரி மற்றும் இரட்சகரின் புண்ணியம் சாட்டப்படுவதின் மூலமாக அவர்கள் தங்களுடைய சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதே. அவரது சித்தத்தை அறியவும் செய்யவும் முழு சந்தர்ப்பம் கிடைத்த பிறகு இவர்கள் அர்ப்பணம் செய்ய மறுத்தால், அந்த நேரத்திலிருந்து அவர்களது ஓட்டம் பின்னோக்கியதாக இருக்கும். அதில் அவர்கள் திரும்பி வரும் வரை தெய்வீக தயவு குறைந்து கொண்டே வரும். இப்படியிருந்தும் தேவனுடைய நோக்கங்கள் அவர்கள் மேல் பெருந்தன்மையாக இருக்கிறது. ஏனெனில் அவர்கள் ஆயிரம் வருட மேசியாவின் ராஜ்யத்தின் கிருபையான ஏற்பாடுகளை மனுக்குலத்துடன் பகிர்ந்து கொள்ளுவார்கள்.

பலியின் உடன்படிக்கையை ஏற்படுத்தி, தேவனுடைய பிள்ளைகள் மற்றும் இயேசுவின் உடன் சுதந்ததராக பிரகாரத்திலிருந்து உயர்ந்த தெய்வீக தயவுக்கு பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவார்கள். பின்னர் பயத்தில் தயங்கி நின்று, அவர்களது பலியை நிறைவேற்றாமல் புறக்கணித்தால் நெருக்கமான ஐக்கியத்தில் நிலைத்திருக்கமாட்டார்கள். முடிவில் பிரகார நிலைமைக்குள் வெளியேற்றப்படுவார்கள். அங்கே அவர்கள் திரள் கூட்டத்தாராக தேவ தயவில் இருப்பார்கள். இல்லையென்றால் அவர்கள் முழுவதுமாக பின்வாங்கினால் அவர்களது பங்கு இரண்டாம் மரணத்தில் இருக்கும்.